**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**C.C.No. 13/2026**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **: ஜோசப் பிராங்கின்** | தொழில் | : தலைமைக் காவலர் |
| தகப்பனார் பெயர் | : ஆகஸ்டின் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : கொடைக்கானல் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 45/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 30.03.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பழனி மதுக்விலக்கு அமல் பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.11.2025 ம் தேதி நான் , தலைமைக்காவலர் பாலகிருஷ்ணன் மற்றும் சார்பு ஆய்வாளர் ராஜகுமரன் மதுவிலக்கு குற்றம் தொடர்பாக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது 09.00 மணியளவில் மங்களம்கொம்பு எதிரி ராமசாமி மகன் பாஸ்கரன் அவரது வீட்டின் அருகே சந்தேகத்திற்கிடமாக நின்றுந்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் உடைமையை சோதனையிட்டபோது 26 எண்ணிக்கையுள்ள 180 ML அளவுள்ள Monitor மதுப்பாட்டில்கள் இருந்தது கண்டறியப்பட்டது. அவரை விசாரித்தபோது மதுப்பாட்டில்களை சில்லறை விற்பனைக்காக வேண்டி வைத்திருந்ததாக தெரிவித்ததன் அடிப்படையில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் அத்தாட்சியின்பேரில் மதுப்பாட்டில்களை நான், மற்றும் தலைமைக்காவலர் பாலகிருஷ்ணன் சாட்சியாக இருக்க மேறசொன்ன மதுப்பாட்டில்களை சார்ப்பு ஆய்வாளர் ராஜகுமரன் கைப்பற்றினார். மேலும் மதுவிலக்கு குற்ற சம்பவத்தில் ஈடுப்பட்ட எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட மதுப்பாட்டில்களை காவல்நிலையம் கொண்டுவந்து சார்பு ஆய்வாளர் ராஜகுமரன் குற்ற எண் 121/2025 பிரிவுகள் **4(1)(C) TNP (Amendment) Act, 2024 –** கீழ் வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் ராஜகுமரன் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.1** ஆகும். பிறகு எதிரி பாஸ்கரனை நிலைய ஜாமீனில் விடுவித்தார். சார்பு ஆய்வாளர் தயாரித்த அத்தாட்சி **அ.சா.ஆ. 2ஆகும்** இதுகுறித்து சார்பு ஆய்வாளர் என்னை விசாராணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பொதுவாக ரோந்து செல்லும் முன்பு அதுகுறித்த விபரத்தினை காவல்நிலைய நாட்குறிப்பேட்டிலும், எனது தனிப்பட்ட நாட்குறிப்பேட்டிலும் குறிப்பேற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக ரோந்து பணி விபரத்தினை நாட்குறிப்பேட்டில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்சொன்ன நாட்குறிப்பேட்டினை இந்த வழக்கில் நான் முன்னிலை

படுத்தியுள்ளேனா என்றால் இல்லை. ரோந்து பணிக்காக காவல்நிலைய இருசக்கர வாகனத்தில் சென்றோம். ரோந்து சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தற்போது நினைவில்லை. இந்த வழக்கில் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மங்களம்கொம்பு பகுதியானது ஜனநடமாட்டம் அதிகம் உள்ள ஊர் என்றால் அதுகுறித்து தெரியாது. வழக்கு சொத்தினை கைப்பற்றியபோது தனி நபர் சாட்சிகளிடம் சாட்சியாக இருக்கச்சொல்லி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கு விசாரணை முறைப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகுதான் அத்தாச்சி ஆவணம் தயார் செய்யப்படும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதலில் அத்தாட்சி தயார் செய்தபிறகுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்பு தனியாக புகார் அளிக்கப்பட்டு அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட மதுப்பாட்டில்கள் மதிப்பு விபரம் குறித்து சார்பு ஆய்வாளரின் விசாணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் பெயர் விபரத்தை விசாரித்து தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ள நிலையில் நான் விசாரித்த நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மதுப்பாட்டில்கள் எங்கிருந்து யாரிடம் வாங்கப்பட்டது என்ற விபரம் எதுவும் நான் கண்டறிந்து அதுகுறித்து சார்பு ஆய்வாளரின் விசாரணையின்போது நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கைப்பற்றபட்ட மதுப்பாட்டில்கள் எளிதில் அரசு மதுபானக்கடைகளில் கிடைக்கும் என்றால் சரிதான். புகைப்படமானது காவல்நிலையத்தில் எடுத்த புகைப்படம் என்றால் சரிதான். எதிரி யாருக்காக எங்கு விற்பதற்காக மதுப்பாட்டில்களை எடுத்துச்சென்ற விபரம் கண்டறிந்தேனா என்றால் இல்லை. சார்பு ஆய்வாளர் என்னை காவல்நிலையத்தில் வைத்து வழக்கு பதிவு செய்த அன்று விசாராரணை செய்தார். எதிரி மதுப்பாட்டிலை விற்கும் தருவாயில் வாடிக்கையாளர் முன்னிலையில் கைது செய்யப்பட்டாரா என்றால் இல்லை. எதிரி மதுப்பாட்டில் விற்றுக்கொண்டிருப்பதாக தனிப்பட்ட எழுத்து மூல புகார் எதுவும் காவல்நிலையத்தில் பெறப்பட்டதா என்றால் இல்லை. எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், காவல் நிலைய நிலுவை வழக்கை முடிக்கவேண்டி எதிரி மீது பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.30 17:43:43 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.